**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 07.07.2026**
**OS. No.191/2016**
**வழக்கு சாட்சி DW.1–சிவகாமி , க/பெ.மணி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

6. தாவா 1வது அயிட்ட சொத்தை காலி வீட்டு மனையாக வாதியும், குப்புசாமி என்பவரும் கூட்டாக கிரயம் பெற்றார்கள் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆக வாதி தாக்கல் செய்துள்ளது தாவா சொத்துக்கள் அமைந்துள்ள பகுதி வீடு கட்டுவதற்கு மட்டும் குறிப்பிட்டு அங்கீகாரம் பெறப்பட்டதற்கான ஆவணம் என்றால் சரியல்ல. அந்த அங்கீகார வரைபடம் வழங்கியுள்ளதால் அந்த இடங்களில் வீடு மட்டும் தான் கட்ட வேண்டும் என்றும், வணிக வளாகங்களோ, குடோனா கட்டக்கூடாது என்றால் சரியல்ல.

7. குப்புசாமியும், வாதி மணியும் சேர்ந்து 1வது அயிட்ட சொத்தை கூட்டாக கிரயம் பெற்று வாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளதால் வாதிதான் அந்த சொத்தின் முழு உரிமையாளர் என்றால் எனக்கு தெரியவில்லை. வாதியின் பெயரில்தான் அனைத்து வரி ரசீதுகளும், வருவாய் ஆவணங்களும் உள்ளதால் அவர்தான் உரிமையாளர் என்றால் எனக்கு தெரியாது.

8. 1வது அயிட்ட சொத்தில் வாதி கட்டியுள்ள வீட்டிற்கு வடக்குபுறம் ரோட்டை பார்த்தாவறுதான் வாசற்படி உள்ளதா என்றால் சரிதான். மேற்குபுறமும் வாசற்படி உள்ளது. நான் சொல்வது தவறு என்றும் வடக்குபுறம் மட்டும் தான் வாதிக்கு முகப்பு வாசல் உள்ளது என்றால் சரியல்ல. வாதியின் வீட்டிற்கு மேற்குபுறம் உள்ளது. குஞ்சாண்டியூர் செல்லும் பஞ்சாயத்து ரோடு என்றால் சரிதான்.

9. வழக்கில் பிரச்சனைக்குரிய ரோடான தாவா 3வது அயிட்ட சொத்தானது மனைதாரர்களுக்கு ஒதுக்கப்பட்ட ரோடு என்றும், பஞ்சாயத்து ரோடு இல்லை என்றால் சரிதான். தாவா 3வது அயிட்ட சொத்தான ரோட்டின் வழியாக கடந்த 08.04.2019ம்

தேதியில் எங்கள் குடோனுக்கு வந்த லாரி மோதி ஒரு குழந்தை இறந்துவிட்டது என்றால் சரியல்ல, அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. சங்கர், த/பெ. மணி என்பவர் என் மகன் ஆவார். அவர்தான் இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். மேற்கண்ட குடோனுக்கு வந்த லாரி மோதி ஒரு குழந்தை இறந்துவிட்டது தொடர்பாக என் மகனான 2ம் பிரதிவாதியை 1ம் குற்றம் சாட்டப்பட்டவராக காட்டி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு எதுவும் பதிவு செய்யப்படவில்லை.

10. கவிதா, க/பெ.ஜோதிமணி என்பவர் எங்கள் வீட்டிலிருந்து 50 அடி தூரத்தில் உள்ளார். மேற்படி கவிதா என்பவர் தான் என் கணவர் மீதும், என் மகனான 2ம் பிரதிவாதி மீதும் மேற்கண்டவாறு புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எங்கள் கட்டிடத்தை சுமார் 6 வருடங்கள் சிவில் சப்ளைக்கு வாடகைக்கு விட்டிருந்தோம். 2016ல் இந்த வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் எங்கள் வீட்டின் குடோனில் சிவில் சப்ளையினர் வாடகைக்கு இருந்தனர் என்றால் சரிதான்.

11. சிவில் சப்ளையினருக்கு வாடகைக்கு விட்டது தொடர்பாக வாடகை ஒப்பந்தம் ஏதேனும் ஏற்படுத்திக்கொண்டோமா என்றால் என் மகனை கேட்டால்தான் தெரியும். எங்கள் வீட்டை குடியிருப்பதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும், வணிக நோக்கத்திற்கு பயன்படுத்தக்கூடாது என்றால் அது அவருக்கு கிடைக்கதக்கதல்ல. எங்கள் வீட்டின் குடோனை 3, 4 பிரதிவாதிகள் பயன்படுத்தக்கூடாது என்று வாதி பரிகாரம் கோரியுள்ளார் என்றால் சரியல்ல. தாவா 3வது அயிட்ட ரோட்டில் வணிக நோக்கத்திற்காக உபயோகிக்கப்படும் எந்த ஒரு வாகனமும் செல்லக்கூடாது என்றால் சரியல்ல.

12. சந்திரன் நகர் என்ற பெயரில் பிளாட் வரைபடம் பொறுத்தவரையில் தீர்மானமானது வீட்டுமனை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும், வணிக கட்டிடங்களாக பயன்படுத்தக்கூடாது என்று குறிப்பிட்டு நிறைவேற்ற கூடாது என்றால் சரியல்ல, நாங்கள் வணிக நோக்கத்திற்காக அங்கிகாரம் பெற்றுள்ளோம். வா.சா.ஆ.1 வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள மனைகளும், அரசு தீர்மானம் ஆகியவை அனைத்தும் வீட்டு

மனைக்காக தான் என்றும், அந்த மனைகளை நானும், மற்ற மனைதாரர்களும் அதை வீடு கட்டி குடியிருக்க மட்டும் தான் பயன்படுத்தவேண்டும், வணிக நோக்கத்திற்காக பயன்படுத்தக்கூடாது என்றால் சரியல்ல, வணிக கட்டிடங்கள் நிறைய கட்டியுள்ளார்கள்.

13. உண்மையாக சிவில் சப்ளையினர் எங்கள் கட்டிடத்தில் குடோன் நடத்தியிருந்தால் இது தொடர்பாக மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி பெற்று எங்களுடன் வாடகை ஒப்பந்தம் மேற்படுத்தியிருப்பார்கள் என்றால் சரியல்ல. தாவா 3வது அயிட்ட சொத்தான ரோட்டையும், எங்கள் வீடான தாவா 2வது அயிட்ட சொத்தையும் சட்டத்திற்கு புறம்பாக நான் பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. அதனால் வாதி கோரியவாறு வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/-திரு. M.செல்வம்,<br>
மாவட்ட உரிமையியல் நீதிபதி,<br>
மேட்டூர்.